# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No.103/2015 நாள்.13.10.2025

DW3- திரு.மணிமொழி த/பெ. திரு. கல்யாணசுந்தரம்

1, 3 பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என் தாத்தா பெயர் சோமசுந்தரம் என்றால் ஆமாம். அவரது அண்ணன் பெயர் சொக்கலிங்க முதலியாரா என்றால் தாத்தா ஒருவர்தான். மீனாட்சி சுந்தரம் சொக்கலிங்கமுதலியார் மகனா என்றால் இல்லை கல்யாணசுந்தரம் மகன். என் அப்பாவுக்கு தாவா சொத்து பாகபிரிவினையில் கிடைத்தது என்றால் ஆமாம். அந்த பாகபிரிவினை 9.1.1958இல் நடந்தது என்றால் ஆமாம். அந்த பாகபிரிவினை என் அப்பா கல்யாணசுந்தரத்துக்கும், மீனாட்சி சுந்தரத்திற்கும் இடையில் நடந்தது என்றால் இல்லை. வா.,சா.ஆ.1 பாகபத்திரம் என்ன என்றால் எனது தாத்தா சோமசுந்தரத்துக்கும் அவரது சொக்கலிங்கத்திற்கும் இடையே ஏற்பட்டது. இதன்மூலம் சோமசுந்தரம் மகன் கல்யாணசுந்தரம் ஆகிய ஒருவர்தான் என்றால் ஆமாம். என் அப்பாவிற்கு வா.சா.ஆ.1 மூலம் சொத்து கிடைத்தது என்றால் ஆமாம். அதன்படி அந்த சொத்துக்கள் பூர்விகம் மற்றும் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றால் ஆமாம். பழைய புல எண் 311/1, 311/3 ஆகிய இரண்டும் புலஎண்கள் தற்போது 311/1ஏ, 311/1பி என்றும் 311/2, 4 என்று நான்கு உட்பிரிவு ஏற்பட்டுள்ளது. அது மொத்தவிஸ்தீர்ணம் 2 ஏக்கர் 46 சென்ட் என்றால் ஆமாம். சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் கத்தரிநத்தம். கத்தரிநத்தம் என்பது பூண்டிகாலேஜ் அருகில் உள்ளது என்றால் மாரியம்மன்கோவிலிருந்து 2கி.மீ தொலைவில் உள்ளது. 2014இல் காலேஜ் கட்டுவதற்கு 5கோடிக்கு ஒருவர் விலைக்கு கேட்டார் என்றால் தெரியவில்லை. கார்த்தி என்பவர் மூலம் கேட்டார் என்றால் இல்லை. 3ஆம் நபருக்கு விற்கவேண்டாம் என்றும் நாமேலே பிளாட் போட்டு விற்கலாம் என்று நான் என் அப்பாவிடம் சொன்னேன் என்றால் இல்லை. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் M.Com., Mphil. எந்த ஆண்டு படித்து முடித்தேன் என்றால் 2010. படித்தது பூண்டி காலேஜ் என்றால் ஆமாம். இறந்து போன துளசி வாண்டையார் எங்களுக்கு நெருங்கிய உறவினர் என்றால் ஆமாம். எனக்கு அப்பா, அம்மா வகையில் சொந்தம் என்றால் ஆமாம். அதனால் தான் எனக்கு படித்து முடித்துவுடன் துளசி வாண்டையார் வேலை

போட்டு கொடுத்தார் என்றால் ஆமாம். வழக்கில் சொன்ன உறவுமுறை சரிதான் என்றால் ஆமாம். எனக்கு ஆரம்பத்தில் Temporaryஆக வேலை என்றால் ஆமாம். 4வருடம் வேலை பார்த்தேன் என்றால் ஆமாம். மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூ. 7000. 2014 ஆம் ஆண்டு சொத்து தொடர்பாக பஞ்சாயத்து நடந்தது என்றால் ஆமாம். பஞ்சாயத்து எங்கு நடந்தது என்றால் நீடாமங்கலம் ஆலங்குடி சொக்கலிங்கமாமா வீட்டில் நடந்தது. பிளாட் Approval யார் பெயரில் வாங்கபட்டது என்றால் அப்பா பெயரில்தான். என்ன Approval என்றால் பஞ்சாயத்து Approval. என்ன பெயர் வைத்தோம் என்றால் கவி அவின்யூ. மொத்தம் 42 பிளாட் என்றால் ஆமாம். அவ்வாறு பிளாட் போட்டபோது எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை. அப்போது யார்யாருக்கு திருமணம் நடக்கவில்லை என்றால் எனக்கு, அசோக்குமாருக்கு, நித்யாவுக்கு நடக்கவில்லை. அசோக்குமார் என் தம்பி என்றால் ஆமாம். வழக்கு போட்டபோது அவர் என் அப்பாவுடன் இருந்தார் என்றால் ஆமாம். பின்பு அவர் இந்த வழக்கில் மனுபோட்டு பிரதிவாதியானார் என்றால் ஆமாம். அவர் என் அளவு படிக்கவில்லை என்றால் 10வது வரை படித்துள்ளார். அவர் என்ன வேலை பார்க்கிறார் என்றால் பில்டிங் ஒர்க் ஷாப்பில் வேலை பார்க்கிறார். நான் சொல்லிதான் அவர் பிரதிவாதியானார் என்றால் இல்லை அவரே ஆனார்.. அவருக்கு வழக்கறிஞர் யார் என்றால் எனக்கு தெரியாது. அசோக்குமார் பிரதிவாதி ஆனபிறகு என்ன கட்சி எழுதி போட்டுள்ளார் என்றால் தெரியாது. எங்கள் மூவரைதவிர மற்றவருக்கு என் அப்பா திருமணம் செய்து வைத்தார் என்றால் ஆமாம். என் தகப்பனாருக்கு வருமானம் விவசாயம் என்றால் ஆமாம். வேறு தனிபட்ட வருமானம் இல்லை என்றால் ஆமாம். பிளாட் போட நடவடிக்கை எடுத்தது யார் என்றால் நான்தான். மனு போட்டதலிருந்து பணம் கட்டும் வரை யார் வேலை செய்தது என்றால் நான்தான். எனக்கு வரவு செலவு எழுதும் பழக்கம் உண்டா என்றால் உண்டு. Approval வாங்க ஆன செலவுகளை டைரியில் எழுதினேனா என்றால் இல்லை 3வருடமாகதான் எழுதுகிறேன். மாதம் என்ன செலவு என்பதை எழுதி வைத்திருக்கேனா என்றால் எழுதி வைத்திருக்கிறேன். தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். Approval வாங்க எவ்வளவு செலவானது என்றால் மொத்தம் 22.5 லட்சம் செலவானது, 16லட்சம் தருவதாக பஞ்சாயத்து பேசபட்டது. Approval Apply செய்து எவ்வளவு நாளில் வாங்கினேன் என்றால் 3லிருந்து

4 நாளில் வாங்கினேன். நிலம் சமமான நிலம் என்றால் இல்லை மரம், பள்ளம் இருந்தது JCB வைத்து சரிசெய்தேன். JCB எப்போதிலிருந்து வைத்திருக்கிறேன் என்றால் 2013, 2014லிருந்து வைத்திருக்கிறேன். எத்தனை JCB வைத்திருக்கிறேன் என்றால் 1. எவ்வளவுக்கு வாங்கினேன் என்றால் 10.5 லட்சம். தற்போது வரை என்னிடம் உள்ளது என்றால் அதை கொடுத்துவிட்டு புதிதாக வாங்கியுள்ளேன். JCBஐ வாடகைக்கு விடுவேன் என்றால் விடுவேன். எவ்வளவு வாடகை என்றால் அப்போது 1மணிக்கு ரூ.800. அப்போது எவ்வளவு செலவு எவ்வளவு வந்தது என்று கணக்கில் இருக்குமா என்றால் இருக்கும். நிலத்தை மட்டம் பண்ண எவ்வளவு செலவு செய்திருக்கிறேன் என்றால் தெரியவில்லை. லேஅவுட்டில் எத்தனை பிளாட் விற்கபட்டது என்றால் 7 பிளாட். என்னென்ன பிளாட் என்றால் 1, 3, 9, 10, 11, 13, 22. எப்போது விற்கபட்டது என்றால் 2014. லேஅவுட் போட்டவுடனேயா என்றால் ஆமாம். அப்போது சதுரடிக்கு எவ்வளவு விலை என்றால் 80ரூபாய். 7பேர் சேர்ந்துவிற்றோமா என்றால் ஆமாம். எல்லா ஒரே நாளில் விற்றதா இல்லை. யார்யார் வாங்கினார்கள் என்றால் ராமலிங்கம், முருகையன், ராஜீவ்காந்தி, ராமதிலகம், அன்பு, மற்ற இரண்டுபேர் தெரியவில்லை. தவமணி, நுர்நிஷாபேகத்திற்கு விற்றோமா என்றால் விற்றோம். விற்றவர்களிடம் பணம் வாங்கியது நான் என்றால் விற்பதற்கு பேசி எழுதி கொடுத்து தொகை வாங்கியது நான் என்றால் அப்பா வாங்கினார். கையெழுத்து மட்டும் ஏழுபேர் போட்டோம் பணத்தை மட்டும் அப்பா வாங்கினாரா என்றால் ஒத்திக்கு வீடு பிடிக்கவேண்டும் என்று வாங்கினார். நான் எழுதி கொடுத்த ஏழு கிரைய பத்திரத்தையும் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். கிரைய பத்திரத்தில் யாரிடம் தொகை கொடுத்தோம் என்று எழுதபட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. பிளாட் விற்றபோது பூர்விக சொத்து என்றும் கூட்டு குடும் பசொத்து என்றும் சொல்லிதான் விற்றோம் என்றால் ஆமாம். சொத்துக்கு என் அப்பா பெயரில் பட்டா என்றால் ஆமாம். ஒவ்வொரு பிளாட்டும் ரூ.1,20,000த்திற்கு விற்றதாக உள்ளது என்றால் அது அரைபிளாட். மொத்தம் கிடைத்தது ரூ.60,00,000 இருக்கும் என்றால் இல்லை. பணம் கொடுத்தவர்களை கேட்டால் எவ்வளவு தொகை என்று தெரியும் என்றால் ஆமாம் அவர்கள் தற்போது உள்ளார்கள் என்றால் ஆமாம். அவர்களை விசாரிக்க போறேனா என்றால் இல்லை. மேற்படி 7பிளாட்டை விற்று ரூ 60,00,000 வந்தது என்றும் அதில் 2லட்சம் என் அப்பாவிற்கு

கொடுத்தேன் மீதம் நான் வைத்து கொண்டேன் என்றும், கணக்கு எழுதி வைத்துள்ளேன் என்றும், கணக்கு கொடுத்தால் தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சாவித்திரி எனக்கு என்ன உறவு என்றால் அக்கா. அவருக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 2011 இருக்குமா என்றால் இருக்கலாம். அவர் திருமணத்திற்காக ஒரு இடம் நடராஜ முதலியாருக்கு விற்கபட்டது என்றால் ஆமாம். அந்த இடம் ரூ.3,00,000த்திற்கு விற்கபட்டிரக்கும் என்றால் இருக்கும். நடராஜமுதலியார் அந்த 3லட்சத்தையும் என்கையில் கொடுத்தார் என்றால் இல்லை என் அப்பாவிடம் கொடுத்தார். 3லட்சத்தையும் என்னிடம் நடராஜமுதலியார் கொடுத்தார் என்றும் நான் கல்யாண சீர்வரிசை செய்வதாக சொல்லிவிட்டு செய்யாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. ஆலங்குடி சொக்கலிங்கமாமா மனைவி பெயர் மகேஸ்வரி என்றால் ஆமாம். அவர் வீட்டில்தான் பஞ்சாயத்து பேசபட்டது என்றால் ஆமாம். துளசி வாண்டையார் எங்கள் இடம் சம்மந்தமாக பஞ்சாங்கம் பேசினார் என்றால் கடைசியாக பேசினார். எனக்கு உண்டான கல்யாண செலவு, என் தங்கை கல்யாணசெலவு, தம்பி கல்யாண செலவு எங்கள் ஒவ்வொவருக்கும் இரண்டு இரண்டு பிளாட் கொடுக்கவேண்டும் என்றும் லேஅவுட் போட்டதில் ஆன செலவிற்காக 16 லட்சம் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்யபட்டு இறுதி செய்து டைப் அடித்து கையெழுத்து போடபட்டது என்றால் ஆமாம் அது ஏற்கனவே பி.சா.ஆ.2 ஆக குறியாகியுள்ளது அதன் அசல் அவர்களிடம்தான் உள்ளது. அந்த அசலை கேட்டு நாங்கள் ஏதும் நோட்டீஸ் கொடுத்தோமா என்றால் இல்லை. பி.சா.ஆ.2 படி எல்லோரும் நடந்து கொண்டோமா என்றால் நடந்து கொண்டோம். மீனாட்சி அம்மாள், சாந்தி, சாவித்ரிக்கு தலா 5லட்சம் கொடுத்தோமா என்றால் அதன்படி நடக்கவில்லை. அவ்வாறு நடக்கவில்லை என்றால் மனைகளை என்னிடம் கொடுக்கவேண்டும் என்று உள்ளது என்றால் ஆமாம். அசோக்குமார் இன்று வரை திருமணம் செய்யவில்லை என்றால் ஆமாம். நித்யாவிற்கு நான் திருமணம் செய்துவைக்கவில்லை என்றால் சரியல்ல நான்தான் செய்துவைத்தேன். நித்யாவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 2015ஆம் ஆண்டு. பத்திரிக்கை உள்ளதா என்றால் தாக்கல் செய்யலாம். நித்யா கணவர் கண்டிதபட்டை சேர்ந்தவர் என்றால் ஆமாம். நித்யாவிற்கு திருமண செலவு எவ்வளவு என்றால் 16லட்சம். என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டாரா என்றால் எல்லா

சொத்தையும் அப்பா பெயரில் எழுதி கொடுத்துவிட்டு வரவேண்டும் என்று சொன்னார் நான் நின்றுவிட்டேன் வேலைக்கு போகவில்லை. கிருஷ்ணசாமி வாண்டையார் இது தொடர்பாக பஞ்சாயத்து பேசினார் என்றால் துளசிஅய்யா பேசுவதற்கு முன்பாக பேசினார். அவர் என்ன பேசினார் என்றால் ஒரு ஒரு பெண்ணுக்கும் 5லட்சம் டெபாசிட் செய்யவேண்டும் அப்பா, அம்மாவுக்கு தனிதனியாக 10, 10 லட்சம் டெபாசிட் செய்யவேண்டும் என்று சொன்னார். அதுபடி நடந்ததா என்றால் இல்லை. கிருஷ்ணசாமி வாண்டையார் அதன்பிறகு பேசினாரா என்றால் அவர்கள் ஒத்து வராததால் பேசமுடியாது என்று சொல்லிவிட்டார். நான்தான் அதற்கு ஒத்துகொள்ளவில்லை என்றும் அவர்கள் தயாராக இருந்தார் என்றும் நான் பிளாட் முழுவதும் எனக்கு வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த பிளாட்டில் நான் இரண்டு வீடுகள் கட்டியுள்ளேன் என்றால் ஆமாம். நான் வீடு கட்டிய அடிமனை இன்றைய வரை கூட்டு குடும்ப சொத்தாக உள்ளது என்றால் ஆமாம். இரண்டு வீடு எவ்வளவு என்றால் ஒரு தகரசெட்டு 1.5 லட்சம், மாடிவீடு தற்போது கட்டி கொண்டு உள்ளேன். வழக்கு நிலுவையில் உள்ளபோது கட்டினேன் என்றால் ஒரு வீடு ஏற்கனவே கட்டி குடியிருந்து வருகிறேன் தற்போது ஒரு கட்டி வருகிறேன். நான் ஒரு கடைவைத்துள்ளேன் என்றால் ஆமாம். அது பிளாட் எண் என்ன என்றால் 6. அதில் என்ன கடை வைத்துள்ளேன் என்றால் பெட்டிகடை. யார் வைத்துள்ளார் என்றால் மாப்பிள்ளை சங்கர் வைத்துள்ளார். எப்படி உறவு என்றால் முறைதான். கடை மட்டும் நான் கட்டி கொடுத்துள்ளேன் அதற்கு வாடகை கிடையாது ஏனென்றால் இடத்தை மீட்க உதவினார். யாருக்கு என் அப்பா ஒரு ஏக்கரை எழுதி கொடுத்தாரோ அந்த பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் நகல் உள்ளது. அந்த அம்மா என்ன பெயர் என்ன ஊர் என்றால் காந்திமதி, குழிச்சபட்டு. கேஸ்போட்ட இடமா என்றால் ஆமாம், அது என்ன வழக்கு எண் என்றால் ஞாபகமில்லை. கோர்ட் மூலமாக அனுபவம் எடுத்தோமா என்றால் அவர் அனுபவம் இடவில்லை பஞ்சாயத்து வைத்து எடுத்தோம். எதற்காக என் அப்பா எழுதி கொடுத்தார் என்றால் தெரியவில்லை. அந்த அம்மாவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்றத்தில் போய் என் அப்பாவை சொத்தை இப்படி செய்துவிடுவார் என்று அப்பாவை அடித்துவிட்டேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.2 அம்மாபேட்டை காவல்நிலையத்தில் முதல் வாதி கொடுத்த புகாருக்கு கொடுத்த ரசீது

என்றால் ஆமாம். அது நடந்தது 21.1.2015 என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ.2 மனு ரசீது புகார் நான் அடித்தது தொடர்பாகவும், இடம் தொடர்பாகவும் கொடுக்கபட்டது என்றால் தெரியாது .போலிஸார் என்னை விசாரித்தார் என்றால் ஆமாம். 2014 ஆம் ஆண்டு என்அம்மா என் மீது ஒரு புகார் கொடுத்தார் என்றால் ஆமாம் அதன் மனு ரசீது **வா.சா.ஆ.10** ஆகும். நித்யா கணவர் பெயர் திருஞானசம்பந்தம் என்றால் ஆமாம். அவரிடம் 11.5லட்சம் பணம் வாங்கினேன் என்றால் இல்லை. நான் போட்டுள்ள லேஅவுட் பெயர் என்ன என்றால் ஐஸ்வர்யம் நகர். அது போடுவதற்குதான் பணம் அவரிடம் வாங்கினேன் என்றால் இல்லை. இது சம்மந்தமாக நித்யா அம்மாபேட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடுபவைதான் புகார் மனு ரசீது என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ.11** ஆகும். அதேபோல் திருஞானசம்பந்தமும் என் மீது தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த ரசீது என்னிடம் காண்பிக்கபடுவது என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ.12** ஆகும். தற்போது என்னிடம் தாலுக்கா காவல்நிலையத்திலிருந்து என்னை விசாரணைக்கு வரச்சொல்லி அனுப்பிய அழைப்பாணையின் நகல் என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ.13** ஆகும். நான் விசாரணைக்கு ஆஜராகி பணம் வாங்கவில்லை என்று சொன்னேனா என்றால் ஆமாம். பணம் கொடுத்து நான் வாங்கியதற்கு எந்த ஆதாரம் இல்லாததாலும் நான் எழுதி கொடுக்காததாலும் அவ்வாறு சொன்னேன் என்றால் இல்லை. நான் நித்யாவிடம் பணம் வாங்கியதற்கு புரோநோட் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பணம் இவ்வாறு போய்விட்டது என்ற செய்தியை கேட்டுதான் திருஞானசம்பந்தத்தின் அம்மா இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. என் அப்பா என் மீது 2.5.2018 இல் புகார் கொடுத்தார் என்றால் ஆமாம் அந்த புகார் மனு ரசீது அது **வா.சா.ஆ.14** ஆகும். என் அப்பா மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இருந்தாரா என்றால் இருந்ததாக சொல்கிறார். நான் போய் பார்த்தேனா என்றால் இல்லை. நான் மீன் குட்டை வைத்துள்ளேன் என்றால் ஆமாம். அது எந்த பிளாட் என்றால் 33,34, 35. இன்று வரை மீன் குட்டை உள்ளது என்றால் ஆமாம். அதில் என்ன வருமானம் வரும் என்றால் தெரியாது. நான் வருமானவரி கட்டுகிறேனா என்றால் இல்லை. இரண்டு வீடு, JCB, மீன்குட்டை, டிராக்டர், கடை எல்லாம் ஏழு பிளாட்டை விற்ற பணத்திலிருந்து வாங்கியது என்றால்

இல்லை. இரண்டு வீட்டையும் இந்த வழக்கில் சேர்ப்பதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் சேர்த்து கொள்ளலாம். பாபநாசம் நீதிமன்றத்தில் என் அப்பா, அக்கா 5பிளாட் விற்கபோவதாக வழக்கு போட்டேன் என்றால் ஆமாம். அந்த வழக்கு எண் 86/2015 என்றால் ஆமாம். அது ஏற்கனவே வா.சா.ஆ.3 குறியாகியுள்ளது என்றால் ஆமாம். இந்த வழக்கிற்கான நடவடிக்கை நா'ன்தான் எடுத்தேன் என்றால் ஆமாம். எங்கள் மூவருக்கும் நான்தான் வழக்கறிஞரை நியமித்தேன் என்றால் ஆமாம். அந்த வழக்கில் தாக்கல் செய்த வக்காலத்து தற்போது என்னிடம் காண்பிக்கபடுவது என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ.15** ஆகும். அந்த வழக்கில் யார் வழக்கறிஞர் என்றால் Tr. R. Ilayaraja. வா.சா.ஆ.15இல் உள்ள கையெழுத்தை நான் போட்டு கொடுத்தேன் என்றால் இல்லை. அந்த கையெழுத்தை ஒப்பு கொண்ட கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்க்க ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. அந்த வழக்கை நான் எதற்கு போட்டேன் என்றால் பஞ்சாயத்துக்கு எதிராக சொத்தை விற்க முயற்சி செய்ததால் போட்டேன். அவ்வாறு விற்கபோனது செட்ல்மெண்ட் பத்திரம் என்றால் இல்லை. 1 முதல் 5 பிரதிவாதிகள் சொத்தை விற்ககூடாது என்றும் அப்படி பத்திரம் பதிய வந்தால் 6ஆம் பிரதிவாதி பதியகூடாது என்று வழக்கு போட்டேன் என்றால் ஆமாம். 311/1ஏ, 311/1பி, 311/1, 311/2 புல எண்கள் அந்த வழக்கில் உள்ளவைதான் இந்த வழக்கிலும் உள்ளது என்றால் ஆமாம். அதில் மொத்த விஸ்தீரணம் 2ஏக்கர் 46 சென்ட் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த சொத்து விபரத்தில் விற்ற 7பிளாட் தவிர சொத்து விபரம் போட்டுள்ளேன் என்றால் ஆமாம். அந்த வழக்கும் இந்த வழக்கோடு சேர்ந்து விசாரணை நடக்கிறது என்றால் ஆமாம். நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. விடுபட்டதாக சொல்லுகிறேனே அந்த சொத்து புல எண் தெரியுமா என்றால் தெரியாது ஊர்தான் தெரியும். எந்தெந்த ஊரில் உள்ளது என்றால் கொத்தட்டை, கூடலூர், கத்திரிநத்தம். கூடலூர் சொத்துக்கள் என் அப்பாவின் தாயார் மூலம் கிடைத்த சொத்துக்கள் என்றால் ஆமாம். அது தொடர்பாக அரியலூரில் பாக வழக்கு நடக்கிறது என்றால் ஆமாம். வேறு சொத்துக்கள் விடுபட்டுள்ளது என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களை சேர்க்க உள்ளேனா என்றால் உள்ளேன். அந்த கார் என் மனைவி உஷாராணி பெயரில் உள்ளது. எந்த ஆண்டு வாங்கினேன் என்றால் இந்த ஆண்டுதான் வாங்கினேன். என் மனைவி

வீட்டு குடித்தனம் என்றால் இல்லை பூண்டி கல்லூரியில் விரிவுரையாளராக உள்ளார். permanent post-ஆ என்றால் இல்லை Temporaryதான். எவ்வளவுக்கு வாங்கினோம் என்றால் 14லட்சம். எங்கு லோன் வாங்கினார் என்றால் மகேந்திரா பைனான்ஸ். என் அப்பாவுக்கு வீடு உள்ளதா என்றால் அம்மாபேட்டையில் ஒத்திக்கு பிடித்துள்ளார். அந்த விஷயத்தை எதிர்கட்சியில் சொன்னேனா என்றால் இல்லை. என் அப்பா வீடு ஒத்திக்கு பிடிக்கவில்லை என்றும், மகள் வீட்டில் உள்ளார் என்றும் சொன்னால் இல்லை. பாபநாசத்தில் தாக்கல் செய்த வழக்கில் நான்தான் எல்லா கையெழுத்தும் போட்டேன் என்றும் மற்ற இரண்டு வாதிகளான சரஸ்வதிக்கும் நித்யாவிற்கும் தெரியாது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் என் தம்பி அசோக்குமாரை பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் ஆமாம். தாவா சொத்தில் எல்லோருக்கும் பங்கு உண்டு என்றால் ஆமாம். தாவா சொத்து கூட்டு குடும்பசொத்து, பூர்விகசொத்து என்பதால் அவர்களுக்கு பாகம் உண்டு என்றும், 1, 3 பிரதிவாதிகள் அதற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்த தயராக இருக்கிறார் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

மேற்கண்ட குறுக்குவிசாரணையே வாதிதரப்பில் ஏற்றுகொள்ளபட்டது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.